# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.62 of 2026
Prosecution Witness No.P.W.5 (L.W.6)

| | |
|---|---|
| Name | Thiru.Senthilkumar |
| Father/Husband Name | K.Raja |
| Calling/Occupation | Inspector of Police |
| Age | 50 |
| Address | Vandavasi Circle, Thiruvannamalai |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.07.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி கிழக்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 14.06.2023 அன்று வேலூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்று காலை எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி நானும், என்னுடன் பெண் தலைமை காவலர் திருமதி. சத்யகலா மற்றும் முதல்நிலை காவலர் குணசேகரன் ஆகியோர்களுடன் காலை 11.00 மணிக்கு அகரம் கிராமத்தில் உள்ள ஆற்று ஓரத்திடம் கண்காணித்து கொண்டு போகும்போது அங்கு ஒரு

நபர் அமர்ந்து கொண்டு சுமார் 5 லிட்டர் பிடிக்க கூடிய பிளாஸ்டிக் கேனிலிருந்து திரவம் போன்ற பொருளை ஒரு டம்பளரில் ஊற்றி அருகிலிருந்தவரிடம் கொடுத்து பணம் பெற்று கொண்டிருந்தவரை பார்டி சகிதம் பிடிக்க முயன்ற போது எதிரில் வாங்கி குடித்தவர்கள் அனைவரும் தப்பி ஓடிவிட்டனர். அங்கு உட்கார்ந்திருந்த நபரை பிடித்து விசாரிக்க அரசால் தடை செய்யப்பட்ட விஷ வாடையுடன் கூடிய நாட்டு சாராயத்தை தான் விற்று கொண்டிருந்ததாக ஒப்பு கொண்டார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் காலை 11.30 மணிக்கு பெறப்பட்டது. பின்பு அந்த இடத்தை பார்க்க எதிரி வைத்திருந்த 3 கருப்பு நிற லாரி டியுப்களில் தலா 40 லிட்டர் வீதம் மொத்தம் 120 லிட்டர் நாட்டு சாராயம், சுமார் 5 லிட்டர் பிடிக்க கூடிய வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனிலிருந்து சுமார் 4 லிட்டர் விஷ தன்மையுள்ள நாட்டு சாராயம் மொத்தம் 124 லிட்டர் மற்றும் பச்சை கலர் பிளாஸ்டிக் டம்ளர் ஒன்று, அட்ரோபின் சல்பேட் கண்ணாடி குப்பிகள் உடைந்தது 8, அட்ரோபின் சல்பேட் கண்ணாடி குப்பிகள் உடையாதது 6, மற்றும் சாராயம் விற்ற பணம் ரூ.50 நோட்டுகள் 2 மொத்தம் ரூ.100, ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் பெண். தலைமை காவலர் சத்யகலா மற்றும் காவலர் குணசேகரன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. அந்த கைப்பற்றுதல்

மகசர் **அ.த.சா.ஆ. 3** ஆகும். அந்த கைப்பற்றப்பட்ட பணம் ரூ.100 (Rs.50 + Rs.50) **சா.பொ.1 வரிசை** ஆகும்.

பின்பு கைப்பற்றி சாராயத்திலிருந்து ரசாயண பகுப்பாய்விற்காக 3 லாரி டியுப்கள் மற்றும் வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனிலிருந்து விஷ வாடை கொண்ட நாட்டு சாராயத்திலிருந்து சுழற்சி முறையில் 750 மில்லி லிட்டர் கொள்ளவு கொண்ட 2 வெள்ளை நிற கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மில்லி லிட்டர் வீதம் எடுத்து வாய்புறம் மூடி வெள்ளை துணியால் சுற்றி SHO சீல் வைக்கப்பட்டது. அந்த பாட்டில்கள் முறையே **சா.பொ. 2 மற்றும் சா.பொ. 3** ஆகும்.

பின்பு கைப்பற்றப்பட்ட சாராயத்தை நிலையம் கொண்டு வர சாத்தியமில்லாததால் பகல் 12.00 மணிக்கு அழித்தல் மகசர் தயார் செய்து அதே சாட்சிகள் முன்னிலையில் ரசாயண பரிசோதணைக்கு எடுத்தது போக மீதமுள்ள சாராயம் மற்றும் லாரி டியுப்களை யாருக்கும் பயன்படாதவாறு மண்ணில் கொட்டி அழிக்கப்பட்டது. அந்த அழித்தல் மகசர் **அ.த.சா.ஆ. 4** ஆகும்.

கைப்பற்றப்பட்ட அட்ரோபின் கண்ணாடி குப்பிகள் உடைந்தது 8 எண்ணிக்கை **சா.பொ. 4** ஆகும். உடையாதது 6 எண்ணிக்கை **சா.பொ. 5** ஆகும். வெள்ளை நிற பிளாஸ்டிக் கேன் **சா.பொ.6** ஆகும். பச்சை கலர் பிளாஸ்டிக் டம்ளர் **சா.பொ. 7** ஆகும்.

பிறகு எதிரி மற்றும் வழக்குசொத்து சகிதம் நிலையம் வந்து எதிரி

மீது காவல் நிலைய குற்ற எண். 471/2023 U/s.4(1)(aaa), 4(1)(i), 4(1–A)ii of TNP Act r/w 328 of IPC படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்து வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ. 5** ஆகும்.

பிறகு கைப்பற்றப்பட்ட சாராயத்தை பகுப்பாய்விற்காக நீதிமன்றத்தின் மூலம் அனுப்பி வைத்தேன். சாட்சிகள் பெண் தலைமை காவலர் சத்யகலா, முதல்நிலை காவலர் குணசேகரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பெண் தலைமை காவலர் சத்யகலா, முதல்நிலை காவலர் குணசேகரன் மற்றும் நான் சம்பவ இடம் சென்று எதிரியை பிடித்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. எதிரியை விசாரணை என்ற பெயரில் காவல் நிலையம் அழைத்து கைது செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. நான் எதிரியிடமிருந்து எந்த ஒரு வழக்கு சொத்தும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு தேவையான ஆவணங்களை அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி உண்மையாக நாட்டு சாராயம் விற்றிருந்தால் தனி நபர் சாட்சியங்களை சேர்த்திருப்பேன் என்றும்

அப்படி ஒரு சம்பவம் நடக்காததால் தான் நான் அவ்வாறான சாட்சிகளை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மகசர், அழிப்பு மகசர், ஒப்புதல் வாக்குமூலம் ஆகிய ஆவணங்களை காவல் நிலையத்திலேயே வழக்கிற்காக தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு மேல் அதிகாரிகள் கேட்டு கொண்டதற்கிணங்க புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல.

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.07.22 16:40:32 +0530